அறநிலையத் துறை அலுவலகம் (மேசையைத் தட்டும் ஒலி), கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் மற்றும் இணை இயக்குநர், தோட்டக்கலைத் துறை அலுவலகம் என 34 துறைகளை ஒருங்கிணைத்து இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத (மேசையைத் தட்டும் ஒலி) அளவிற்கு 34 துறைத் தலைமை அலுவலகங்களை உள்ளடக்கிய பெருந்திட்ட வளாகத்தை வருவாய்த் துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு திருப்பூர் மாவட்டத்திற்குத் தந்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னுமா கேட்கிறீர்கள்?

திரு. கே. தங்கவேல்: நன்றி சொல்லிவிடுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 6–வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1) திரு. அ. பாப்பா சுந்தரம்

2) திரு. ஆர்.பி. உதயகுமார்

3) திரு. கே.பி. அன்பழகன்

2013 பிப்ரவரி 5] [பேரவைத் தலைவர்]

4) திரு. ஆர். சின்னசாமி

5) திரு. பி.ஜி. நாராயணன்

6) திரு. சு. குணசேகரன்

முற்பகல் 11–10

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை வழிமொழிதல் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

***திரு. கே.பி.பி. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

@ 159 முதல் 207 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.